(இ) எண்ணூர் அனல் மின் நிலையத்திற்கு சிங்கரேணீ யிலிருந்து கிடைக்கும் நிலக்கரி.

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, மிக முக்கிய மான விஷயத்தை நான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எண்ணூரிலே உள்ள அனல் மின் நிலையத் திற்கு நிலக்கரி அனுப்புவதை சிங்கரேணி சுரங்க அதிகாரிகள் நிறுத்தி விட்டார்கள், காரணம் தமிழ்நாடு அரசு பணம் கட்ட வில்லை எனவே .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி ஒத்திவைப் புத் தீர்மானமோ கவன ஈர்ப்போ கொண்டுவாருங்கள். அர சாங்கம் அக்கறை எடுத்துக் கொள்ளும். பெரிய தலைவர்களே இப்படிச் செய்தால் என்ன செய்வது ?

(முற்பகல் 10.10)

3. கவன ஈர்ப்பு.

மாணவர்கள் பயன்படுத்தும் குறிப்பேடுகளின் விலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம், இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத் துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருவார்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, " தமிழ்நாட்டில் நோட்டு புத்தக விலை உயர்வு காரணமாக மாணவர்கள் பெற்றோர்களிடையே நிலவும் கவலைக் குறித்து " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகி றேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

இந்திய அரசினால் ஒதுக்கப்படும் சலுகை விலைத் தாளைப் பயன்படுத்திக் குறிப்பேடுகள் தயாரித்து அவற்றை வழங்கும் பணி 1—10—1979 முதல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத் திடம் ஒப்படைக்கப்பட்டது. சலுகை விலைத் தாளைப் பயன் படுத்தித் தயாரிக்கப்படும் குறிப்பேடுகள் ஒவ்வொரு வகையின் உச்சபட்ச விற்பனை விலையையும் இந்திய அரசே நிர்ணயித் திருக்கிறது. அவ்வப்போது விலைத்தாளின் விலை மாற்றப்படும் போது குறிப்பேடுகளின் விலையும் மாற்றப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS